<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>M.C.No. 16/2023</u>

RW : 1

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ச.வேலவன் | த / பெ. | திரு. சங்கரநாராயணன் |
| கிராமம் | : | நன்னிலம் | தாலுக்கா | நன்னிலம் |
| தொழில் | : | தீயணைப்புதுறை | வயது | 37 |

<u>முதல்விசாரணை</u>

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். நான் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி 1 ஆக சாட்சியமளித்துள்ளேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் உண்மையானவை. அவை என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 25.01.2022 ஆம் தேதிய **மனுதாரருடன் சேர்ந்து வாழ வழக்கறிஞர் மூலமாக எனக்கு அனுப்பிய அறிவிப்பு அசல் எ.ம.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) என்னுடன் மனுதாரர் சேர்ந்து வாழ வராததால் **தற்கொலைக்கு முயற்சி செய்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்ததற்கான குறிப்பேடு அசல் தாக்கல் செய்யப்படுகிறது மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் எ.ம.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 12.07.2024 முதல் 15.10.2024 வரையிலான தொடர்ச்சியாக மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வராமல் இருந்ததால் **மன வேதனையில் பணிக்கு செல்ல முடியாமல் மருத்துவ விடுப்பு எடுத்ததற்கான அலுவலக சான்று அசல் தாக்கல் செய்யப்படுகிறது மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் எ.ம.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) பணிக்கு செல்லும்பொழுது விபத்து ஏற்பட்டு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு பணிக்கு செல்ல முடியாமல் **மருத்துவ சிகிச்சை எடுத்ததற்கான மருத்துவ சான்று அசல் தாக்கல் செய்யப்படுகிறது மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் எ.ம.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) **நான் வங்கியில் கடன் பெற்றதற்கான நாளது தேதிவரை செலுத்தி வரும் மாதத்தவணை ரசீது நகல் தாக்கல் செய்யப்படுகிறது மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் எ.ம.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) **ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் எ.ம.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.03.17 15:24:50 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்